©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 46] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 15, 2017
ஐப்பசி 29, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 145, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, 31 ஆகஸ்டு 2017.]*

1948–ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112–ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1950–ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் செய்யக்கருதியுள்ள, கீழ்காணும் திருத்தங்களின் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 115–ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு அதனால் பாதிக்கக்கூடிய அனைவரின் தகவலுக்காக, இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தி ஐந்து நாட்கள் முடிவடைந்தப் பின்னர், இந்த வரைவுத் திருத்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும், வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எதேனுமிருப்பின், அவை 47/1, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600 032–இல் உள்ள தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் வாயிலாக அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பி வைக்கவேண்டும்.

**வரைவுத் திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,—

(1) 3–ஆம் விதியின் துணை விதி (2)–இல் "படிவம் எண் 1–இல் மூன்று படிகளில்", என்ற சொற்றொடருக்குப் "பதிலாக "தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணையவழி வலைவாசல் வாயிலாக படிவம் எண் 1–இல்", என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(2) 4–ஆம் விதியின்

(a) துணை விதி (2)–இல், "படிவம் எண் 2–இல் மூன்று படிகளில்", என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணையவழி வலைவாசல் வாயிலாக படிவம் எண் 2–இல்", என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(b) துணை விதி (3)—இல், "வட்டார தொழிற்சாலைகளின் துணைத் தலைமை ஆய்வாளர்" என்ற சொற்றொடருக்குப் பின்னர், "அல்லது தொழிலகப் "பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணையவழி வலைவாசல் வாயிலாக, "இணைய வழி தொகை செலுத்துதலின் பேரில்" என்ற சொற்றொடர் சேர்க்கப்பட வேண்டும்.

(c) துணை விதி (6A)—இல், "தொடர்ச்சியான ஐந்து ஆங்கில ஆண்டுகள்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தொடர்ச்சியான பத்து ஆங்கில ஆண்டுகள்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(3) 6—ஆம் •விதியின், துணை விதி (2)—இல் "வட்டார தொழிற்சாலைகளின் துணைத் தலைமை ஆய்வாளர்" என்ற சொற்றொடருக்குப் பின்னர், அல்லது தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணையவழி வலைவாசல் வாயிலாக, இணைய வழி தொகை செலுத்துதலின் பேரில் என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(4) 7—ஆம் விதியின்

(a) துணை விதி (2)—இல் "படிவம் எண் 2—இல் மூன்று படிகளில்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணையவழி வலைவாசல் வாயிலாக படிவம் எண் 2—இல்," சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(b) (3)—ஆம் துணை விதியின், இரண்டாவது வரம்பு நிபந்தனையில், "தொடர்ச்சியான ஐந்து ஆங்கில ஆண்டுகள்," என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தொடர்ச்சியான பத்து ஆங்கில ஆண்டுகள்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(5) 11—ஆம் விதியின் துணை விதி (1)—இல், "வட்டார தொழிற்சாலைகளின் துணைத் தலைமை ஆய்வாளர்" என்ற சொற்றொடருக்குப் பின்னர், அல்லது தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணையவழி வலைவாசல் வாயிலாக, "இணைய வழி தொகை செலுத்துதலின் பேரில்" என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(6) 56—B-ஆம் விதியில்,

(a) துணை விதி (1)—இல் "தொழிற்சாலைகளின் துணைத் தலைமை ஆய்வாளர்" என்ற சொற்றொடருக்குப் பின்னர், "தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணையவழி வலைவாசல் வாயிலாக," என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(b) துணை விதி (3)—இல், "தொழிற்சாலைகளின் துணைத் தலைமை ஆய்வாளர்" என்ற சொற்றொடருக்குப் பின்னர், அல்லது "தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணையவழி வலைவாசல் வாயிலாக, இணைய வழி தொகை செலுத்துதலின் பேரில்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(7) 100—ஆம் விதியில், "ஒவ்வொரு தொழிற்சாலையின் மேலாளர் கீழ்காணும் கணக்கு விவர அறிக்கைகளை ஆய்வாளரிடம் அளிப்பார் அவையாவன" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஒவ்வொரு தொழிற்சாலையின் மேலாளர், கீழ்காணும் கணக்கு விவர அறிக்கைகளை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணையவழி வலைவாசல் வாயிலாக ஆய்வாளரிடம் அளிப்பார் அவையாவன:—" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(8) படிவம் எண் 22—இல்,

(a) 11—ஆம் பகுதியின் துணைப் பகுதிகள் (i) மற்றும் (ii) இல் "மாதமொன்றுக்கு ரூ. 18,000/—க்கு மேற்படாமல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "1936 ஆம் ஆண்டு, ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1936) 1—ஆம் பிரிவைச் சேர்ந்த (6) உட் பிரிவின் கீழ் மத்திய அரசால் குறிப்பிடப்பட்ட மாதாந்திர ஊதியங்களுக்கு மேற்படாமல்" என்ற சொற்றொடர் முறையே அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(b) 13—ஆம் பகுதிக்குப் பின்னர், பின்வரும் பகுதிகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் அதாவது:—

"14. மாநிலங்களுக்கிடையே புலம் பெயர்ந்த தொழிலாளர்கள்

ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் முகவரி

ஒப்பந்த காலஅளவு

பணியின் தன்மை

ஒவ்வொரு ஒப்பந்ததாரரால் பணியமர்த்தப்பட்டுள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பெருமளவு எண்ணிக்கை

பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை

பணிபுரிந்த மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை

**15.** தொழிலாளர்களுக்கு பணி நிரந்தர நிலையை வழங்குதல்

தொழிற்சாலையில் பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை

டிசம்பர் மாதம் **31—**ஆம் நாளுடன் முடிவடைந்த ஆங்கில ஆண்டில் **480** நாட்கள் பணிக்காலம் நிறைவு செய்தும் பணி நிரந்தரம் செய்யப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை

டிசம்பர் மாதம் **31—**ஆம் நாளுடன் முடிவடைந்த ஆங்கில ஆண்டில் பணி நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை

ஜனவரி **1** அன்றுள்ளவாறாக, பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டிய தொழிலாளர்களின் எண்ணிக்கை

காலதாமதத்திற்கான காரணங்கள்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்,*
*(முழு கூடுதல் பொறுப்பு).*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்,*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.